முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1289

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.04.2023, திங்கட்கிழமை

1. ஞானவள்ளலே அரங்கா போற்றி
ஞானிகள் பலம்கொண்ட தேசிகா போற்றி
வானவர்கள் மெச்சுகின்ற தர்மஞானியாய்
வையகத்தை சூட்சும ரூபில் ஆளுகின்ற அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 27 ம் நாள், 10.04.2023, திங்கட்கிழமை)
ஆற்றல்பட அரங்கன் தர்மம் உலகை காக்கும்
அறமெனும் அரங்கன் சன்மார்க்க நெறி இந்த உலகையே மீட்கும்
3. மீட்புதந்து உயர் தொண்டர்களை படைத்து
மேலான ஞானவான்கள் எங்கும் நிரம்ப
ஆட்சிதானும் ஞான ஆட்சியாக உலகம்
அரங்கன் தூண்டலில் இனிதே நடந்தேறும்
4. நடந்தேற உண்டான மகா அற்புதத்தை
ஞானிகள்வடிவில் உலகமெல்லாம் ஆறுமுகன் யான் எடுத்துச்சென்று
வகையாக ஆங்காங்கே ஞானியர் கூட்டங்களை
வல்லமைபட நிரம்பச் செய்து இனிதே அரங்கன் விரும்புகின்ற வண்ணம்
5. மண்ணுலகமெல்லாம் தர்மம் தழைக்க
மாதர்மவான்களெல்லாம் ஞானவான்களாக மாற்றம் கண்டு
கண்டுமே ஞானிகளாகும் வண்ணம் அற்புதங்கள் பெற்று
கலியுகத்தில் அரங்கன் வேண்டலின்படி நவகோடி ஞானியர்கள் பெருகி
6. இந்த உலகமே ஞானிகள் ஆட்சியாகவும்
ஞான சித்தர் காலமாகவும்
மாற்றங்கண்டு சிறப்பு காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–